சார்பு செய்யப்படுகிறது.

**மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.ரா.நாராயணபாபு, எம்.டி., டி.சி.எச்.,**

**ந.க.எண்:72684/நி2/4/2020.** **நாள்: 13.05.2022.**

பொருள் : நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.K.மாரிமுத்து த/பெ.(லேட்) திரு.K.கருப்பையா, இளநிலை உதவியாளர், அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை)எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை)எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை)எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
8. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:37662/நி2/4/2019, நாள்:25.10.2019.
9. முதல்வர், அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை அவர்களின் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:17656/நி1/2/2009, நாள்:11.11.2019.
10. முதல்வர், அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை அவர்களின் கடித ந.க.எண்:19778/நி1/4/2020, நாள்:01.12.2020.

*****

முதல்வர் ★ அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை - 625 020 ★
26 MAY 2022

**ஆணை:**

மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையில் ஆண் செவிலிய உதவியாளராக (Male Nursing Assistant) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.K.கருப்பையா

அவர்கள் 25.03.2009 அன்று பணியில் இருக்கும்போது மரணமடைந்து விட்டார். அவரின் பிறந்த தேதி 07.02.1955 ஆகும். அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 28.02.2013 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும் வாரிசுதாரருமான திரு.K.மாரிமுத்து அவர்கள் தனது 06.01.2010 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

2) மனுதாரர் திரு.K.மாரிமுத்து அவர்களின் பிறந்த தேதி 01.04.1982 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 – 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், 15.11.2019 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.K.மாரிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 15.11.2019 பிற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

1. திரு.K.மாரிமுத்து,
இளநிலை உதவியார்,
அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை.

– உரிய வழியாக.

2. முதல்வர், அரசு இராசாசி மருத்துமனை, மதுரை.

3. மாநில கணக்காயர், சென்னை -600 018.

4. சம்பள கணக்கு அலுவலர், மதுரை.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.

உதிரி / இருப்பு கோப்பு.

**// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //**

14/5/22

**மேலாளர்.**

ந.க. எண்: 10628/ஸ்1/4/2022 நாள்: 14.6.2022

14/5/22

இக்கடிதம் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

14.6.22

முதல்வருக்காக

14/6/2022

பெறுநர்:

திரு. க. மணிமுத்து, இளநிலை உதவியாளர்

அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை